# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனத்திற்கான விண்ணப்பம்

### இணைப்பு – 1

விண்ணப்பதாரரின் புகைப்படம் சான்றொப்பத்துடன்

1. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் :
2. விண்ணப்பதாரர் பெயர் :
3. தந்தையின் பெயர் :
4. நிரந்தர முகவரி :
5. மின்னஞ்சல் முகவரி :
6. கைபேசி எண். :
7. கல்வி தகுதி (நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிக்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)
   i. சித்த மருத்துவத்தில் மருந்தாளுநர் பிரிவில் பயின்ற கல்லூரி மற்றும் பல்கலைகழகத்தின் பெயர் :
   ii. மருந்தாளுநர் பட்டப் படிப்பில் பெற்ற மதிப்பெண் :
8. மதம் (சாதி சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) :
9. பிறந்த தேதி மற்றும் வயது (பள்ளி சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) :
10. சித்த மருத்துவமனைகளில் பணிபுரிந்த முன் அனுபவம் இருப்பின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) :
11. நன்னடத்தை சான்று (அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து) :
12. பொதுவானவை :

மேலே கூறப்பட்ட வரிசை எண். 01 முதல் 12 வரையிலான விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், நான் இந்து மதத்தை சார்ந்தவன் என்றும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

**நாள்.–**

**இடம்.–** விண்ணப்பதாரரின் கையொப்பம்

## இணைப்பு –2

## நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர் இந்து மதத்தை சார்ந்தவராகவும், தமிழ்நாட்டை சார்ந்தவராகவும் இருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர் ஜுலை 2022ம் மாதம் முதல் தேதியன்று 45 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
3. விண்ணப்பதாரர் உடல் ஆரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும்.
4. இப்பணியானது முற்றிலும் தற்காலிகமானது இப்பணிக்கான பணியாணை ஒப்பந்த அடிப்படையிலேயே வழங்கப்படும்.
5. இப்பணியானது முற்றிலும் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமானது என்பதால் இப்பணியினை மேற்கொண்டு இத்திருக்கோயில் பணி நியமனங்களில் எவ்வித முன்னுரிமையும் கோரக்கூடாது.
6. பணியாணை பெறப்பட்ட நபர் ரூ.100/–க்கான ஒப்பந்தப்பத்திரத்தில் ஒப்பந்தம் மேற்கொண்டு பணி ஏற்பு செய்ய வேண்டும்.
7. நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், பட்ட கடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டவர்கள். அரசு பணியில் இருந்தும், பொது ஸ்தாபனத்தில் இருந்தும், இதர திருக்கோயில்களிலிருந்தும் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள். இத்திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர்கள் மேற்படி பணிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
8. விண்ணப்பதாரர் நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். இதற்கு தகுதி பெற்ற அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் (Gazetted Officer) பெறப்பட்ட நன்னடத்தை சான்று நகலினை விண்ணப்பத்துடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.
9. இந்த வேலை வாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும் 10.11.2022ம் தேதி மாலை 5.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படமாட்டாது.
10. விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய கல்வி மற்றும் இதர தகுதிச் சான்றுகளின் சான்றிட்ட நகல்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
11. விண்ணப்பதாரர் விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் மற்றும் கைபேசி எண் குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும்.
12. வரப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முக தேர்விற்கு அழைப்பு அனுப்பப்படும்.
13. நேர்முக தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாருக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.
14. நேர்முக தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் நபரை / நபர்களை எவ்வித காரணங்களும் கூறாது நிராகரிக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
15. தேர்வு செய்யப்படும் நபருக்கு சென்னை இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு பின்பே பணி ஆணை வழங்கப்படும்.
16. விண்ணப்பதாரர் விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்து சான்றிதழ்களும் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் (Gazetted Officer) சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்பட நகல்களாக மட்டுமே இருக்க வேண்டும். எக்காரணத்தை கொண்டும் அசல் சான்றிதழ்களை அனுப்ப கூடாது.
17. விண்ணப்பதாரர் அசல் சான்றிதழ்கள் அனைத்தும் நேர்முக தேர்விற்கு அழைக்கும் போது எடுத்து வர வேண்டும்.
18. விண்ணப்பதாரரின் விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பதாரர்கள் புகைப்படம் ஒட்டப்பட்டு அதில் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் (Gazetted Officer) மேலொப்பம் பெறப்பட வேண்டும்.
19. விண்ணப்படிவம், தகுதிகள் மற்றும் நிபந்தனைகளை இத்திருக்கோயில் அலுவலகத்தில் நேரிலும் மற்றும் www.hrce.tn.gov.in மற்றும் www.palanimurugan.hrce.tn.gov.in ஆகிய இணையதளங்களிலும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(ஒம்)நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்

## இணைப்பு –3

## விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

இணை ஆணையர்/செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி–624601,

திண்டுக்கல் மாவட்டம்

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | ஒப்பந்த ஊதியம் மாதம் ஒன்றுக்கு | காலியிடம் | கல்வி தகுதி |
|---|---|---|---|---|
| 1. | மருந்தாளுனர் (சித்தா) | ரூ.15,000/– | 3 (மூன்று) | சித்த மருத்துவத்தில் மருந்தியல் பிரிவில் பட்டயப்படிப்பு முடித்திருக்க வேண்டும். ( தமிழ்நாடு சித்தா எம்.ஜி.ஆர் பல்கலைகழகத்தால் வழங்கப்பட்டது) |

வயது வரம்பு : விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தியடைந்தவராகவும், 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்படிவம், தகுதிகள் மற்றும் இதர நிபந்தனைகளை இத்திருக்கோயில் அலுவலகத்தில் நேரிலும், www.hrce.tn.gov.in மற்றும் www.palanimurugan.hrce.tn.gov.in ஆகிய இணையதளங்களில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

(ஒம்)நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

கண்காணிப்பாளர்